# கலைஞரும் நானும் 31

“அரசியல் அரங்கில் பெண்களும் அதிக அளவில் பங்குபெற வேண்டும் என நினைத்த மாபெரும் தலைவர் கலைஞர் அவர்கள். எனது அரசியல் நுழைவு அவர் வாழ்த்துடன்தான் தொடங்கியது” எனத் தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற முதன்மைக் கொறடாவும், விளவங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான விஜயதரணி.

■ **சி.விஜயதரணி,** சட்டமன்ற உறுப்பினர், முதன்மைக் கொறடா காங்கிரஸ்

## “கலைஞரிடம் கண்ட மாண்பு!”



“பல் மருத்துவராக இருந்த என் தந்தையாரின் கிளினிக்கில் சில நேரங்களில் கலைஞர் அய்யாவை, நான் சிறுவயதில் பார்த்திருக்கிறேன். அப்போது கலைஞருக்குப் பல் மருத்துவராக இருந்தார். அதனால், அவர் கிளினிக் வரும்போது, சில நாட்கள் பார்த்திருக்கிறேன். ஆனால், அவை துல்லியமாக என் நினைவுகளில் இல்லை. அதன் பின்னர் கட்சி நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகளில் பார்த்தாலும் நெருங்கிப் பேசுவதற்கான சந்தர்ப்பம் அமைந்ததில்லை. தவிர, பெரிய தலைவரோடு பேசுவதற்கு இருக்கும் தயக்கம் இருந்தது. எனது அந்தத் தயக்கத்தை உடைத்தவர் கலைஞர்தான்.



### டாக்டர் மகளே...

2011 -ஆம் ஆண்டு தேர்தலில், விளவங்கோடு தொகுதியில் நான் போட்டியிடுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அன்னை சோனியா காந்தி அவர்கள், அந்த வாய்ப்பினை வழங்கி வாழ்த்தினார். அதற்கு அடுத்து நான் சென்ற இடம் கோபாலபுரம். கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெறுவதற்காகச் சென்றேன். என்னைப் பார்த்தவர், “டாக்டர் மகள் என்று அழைக்கட்டுமா, வக்கீலம்மா எனக் கூப்பிடனுமா?” எனக் கேட்டார். “அய்யா உங்க ளுக்கு எப்படி விருப்பமோ அப்படிக் கூப்பிடுங்க” என்றேன். “எனக்கு உங்க அப்பாவை நல்லா தெரியுமே, அதனால டாக்டரோட மகள் எனக் கூப்பிடுகிறேன்” எனக் கூறினார். 30 ஆண்டுகளுக்குப் பின்னரும், அவர் மனதில் என் அப்பாவின் நினைவுகள் உள்ளன என நினைத்தபோது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

வாழ்த்தியது மட்டுமல்ல, விளவங்கோடு தொகுதியின் விவரங்களை அப்டேட்டாக எனக்கு விளக்கினார். “அந்தத் தொகுதி கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்காக இருந்த இடம் என்றாலும், காங்கிரசும் வெற்றி பெற்றுள்ளது. உனக்குப் பேச்சுத் திறமை, ஆளுமை இருக்கு. வக்கீல் என்கிற அனுபவம் இருக்கு, அதெல்லாம் பயன்படும். நல்லா வேலை செய்யுங்க” என அறிவுரைகள் வழங்கினார். அவரைப் பார்த்த பயத்திலிருந்த நான் ரொம்ப இயல்பாக அவரோடு உரையாட முடிந்தது. அதை இப்போது நினைத்தாலும் வியக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது.

### அப்பா மேல் கோபம்

உரையாடலுக்கு முன்னர், அந்த இடத்தையே கலைஞர் கலகலப்பாக்கியதால்தான் நான் இயல்பாக இருக்க முடிந்தது.

“உங்க அப்பா மேல எனக்குக் கோபம் உண்டு” என்றார். நான் பதறியடித்து, “அய்யா அவர் இறந்தே இவ்வளவு காலம் ஆகி விட்டதே, அந்த அளவுக்கா கோபம், என்ன பெரிய தவறு ஏதும் நடந்துடுச்சா ?” எனக் கேட்டேன். “அப்படியெல்லாம் இல்லை, அந்த நேரத்தில எல்லோரும் என்னைப் பார்க்கத்தான் தேடி வருவாங்க. ஆனா, நான் அவரைப் பார்க்க போகணும். இது என்ன நியாயம்?” என்றார்.

அதற்கு நான், “அய்யா ஏதாவது பிரச்சினையா, எனக்குப் புரியலையே" எனக் கேட்டேன்."இல்லம்மா, அவர் அந்த டென்ட்டல் நாற்காலியெல்லாம் தூக்கிட்டு வரமுடியாதுல்ல, அதனால நான்தான் அங்க போயாகணும்” என்றார். இப்படி அந்தச் சூழலைக் கலகலப்பாக்கினார். அதன் பின்னரே நான் அவருடன் இயல்பாக உரையாட முடிந்தது. பெரிய தலைவர், முதலமைச்சர் என்கிற பயத்தையெல்லாம் தன் நகைச்சுவையான பேச்சு மூலம் போக்கி இயல்பாக்கினார். அப்படியான தன்மை கொண்டவர் கலைஞர்.

அதேபோல வெற்றிபெற்ற பின்னர், வாழ்த்துப் பெறுவதற்காகச் சென்றபோதும், “முதல் வெற்றியை, முதலிலேயே கொண்டு வந்த வெற்றியாக்கிட்டீங்களேம்மா” எனப் பாராட்டினார். ஏனென்றால், விளவங்கோடு ரிசல்ட்தான் முதலில் வந்தது. ஆனால், அப்போது காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்ட கணிசமான தொகுதிகளில் நாங்கள் ஐந்து பேர்தான் வெற்றிபெற்றோம். அப்படியான வருத்தத்திலும், காங்கிரசிலிருந்து ஒரு பெண் சட்டமன்றத்துக்குச் செல்வதில் மகிழ்ச்சி அடைந்தார். வாழ்த்தி அனுப்பினார்.

### கூட்டணிக் கட்சிக்குக் காட்டிய மாண்பு

அவரது நினைவாற்றல் கம்ப்யூட்டர் போல எனச் சொல்வார்கள். ஆனால், அதைவிடவும் ஆற்றல்கொண்டவர் கலைஞர்.

எங்களது வீட்டில் ஒரு பழைய புகைப்படம் இருக்கும். அதில் கலைஞர், என்.எஸ்.கே. போன்ற தலைவர்களுடன் என் அப்பா, சித்தப்பா ஆகியோர் இருப்பார்கள். கலைஞரை முதன்முறை சந்தித்து உரையாடும் சந்தர்ப்பத்தில் அதைக் குறிப்பிட்டு, “கன்னியாகுமரில, மயிலாடியில், உங்க வீட்டுல அந்தப் படம் இருக்குமே!” எனக் கேட்டார். கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட படத்தை, அதில் யாரெல்லாம் இருந்தோம் என்பதைக் கூறி கேட்டதெல்லாம் வியப்பான விஷயம். இவ்வளவு தூரம் ஞாபகம் வைத்திருப்பதெல்லாம் மனிதர்களில் அபூர்வம். அப்படியான அபூர்வமான தலைவர், கலைஞர்.

மற்றொருமுறை மாநிலங்களவைத் தேர்தலின்போது, கனிமொழி அவர்கள் நின்றார்கள். நாங்கள் தி.மு.க.வை ஆதரிப்பது என மேலிடம் கூறிவிட்டது. ஆனாலும், கலைஞர் அய்யா போன் செய்து ஆதரவு கேட்டார். இன்றைய முதலமைச்சர் அவர்கள் போன் செய்து தகவலைக் கூறியதுடன், கலைஞர் அய்யா வாங்கிப் பேசினார்.

“கட்சி சொல்லிவிட்டது அய்யா, செய்துவிடுவோம்” என்றேன். “இருக்கட்டும், கொறடா என்கிற முறையில் சொல்லணும்லம்மா” என்றார். அவரது அனுபவம், அரசியலுக்கு முன், என்னையெல்லாம் அழைத்துப் பேச வேண்டும் என்பதே இல்லை. ஆனால், கட்சித் தலைவராக அவர் காட்டிய மாண்பு யாரிடமும் காணாதது. கலைஞர் ஒவ்வொருவருக்கும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பார் என்பதை எனது அனுபவமே எனக்குக் கூறியது.

### பேச்சுதான் மூச்சு

எனது தொலைக்காட்சி விவாதங்களைக் கவனித்தும் கலைஞர் பாராட்டி இருக்கிறார். ஒரு முறை சட்டமன்றத்துக்கு அவர் வரும்போது வணக்கம் வைத்து, நலம் விசாரித்தேன். “நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இந்த விஷயம்லாம் பேசுறதுக்கு உனக்குத் தெரியும். வக்கீல் அல்லவா, நல்லா பேசும்மா, பேச்சுதான் மூச்சு” என வாழ்த்தினார். பிறகு ஒருமுறை அறிவாலயத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின்போதும், அவருக்கு வணக்கம் வைத்தேன். அப்போது உடல்நிலை சரியில்லாத நிலையிலும், விஜயதரணி என இடைவெளி விட்டு அழைத்து வாழ்த்தினார். அந்தச் சூழலில் என்னைப் பெயர் சொல்லி அழைத்தது, என்னை நெகிழ வைத்து, கண்ணீர் வரவழைத்தது.

> **“ 50 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட படத்தை, அதில் யாரெல்லாம் இருந்தோம் என்பதைக் கூறி கேட்டதெல்லாம் வியப்பான விஷயம். இவ்வளவு தூரம் ஞாபகம் வைத்திருப்பதெல்லாம் மனிதர்களில் அபூர்வம்.**

கலைஞருடன் நீண்ட கால அரசியல் பயிற்சி பெற எனக்கெல்லாம் வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்கிற வருத்தம் இருக்கிறது. எனினும், அவர் காலத்தில், அவர் கையால் வாழ்த்துப் பெற்று சட்டமன்றத்துக்கு வந்தது எனக்கு நிறைவாக இருக்கிறது. அவரது ஞானம், உழைப்பு எல்லாவற்றுக்கும் கடைசிவரை தொய்வே இல்லை. அவருடன் பழக, பேச, வாழ்த்துப் பெற வாய்ப்பு அமைவதற்கெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். கோடியில் ஒருவராக வாழ்ந்த தலைவர், கலைஞர். கோடியில் ஒருவர் நம்மை ஆசிர்வதிப்பது என்றால், அந்த வாழ்த்து ஆண்டாண்டு காலத்துக்கு உடன் நிற்கும்.

**...பகிர்வார்கள்**

---

## இந்தியும் தமிழ்நாடும்

தமிழ்நாட்டில் இந்தி படிக்க முடியவில்லை என ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வாய்கூசாமல் கூறிய ஒரு தகவல்தான், இந்திய அளவில் அவரைப் பொய்யராக டிரெண்டிங் ஆக்கிவிட்டது. இதுதொடர்பாக, மூத்தப் பத்திரிகையாளர் விஜயசங்கர், நிர்மலா சீதாராமன் படித்த கல்லூரிக் காலத்தைப் பதிவிட்டு, அவர் பொய்யர் எனக் கூறிய பதிவுதான் இது. “நிர்மலா சீதாராமன் திருச்சியில் இருக்கும் சீதாலட்சுமி ராமசுவாமி கல்லூரியில் 1977-ஆம் ஆண்டிலிருந்து 1980 -ஆம் ஆண்டு வரை பி. ஏ. பொருளாதாரம் படித்தார். அவருக்கு ஒரு வருடம் சீனியரான என் சகோதரி, இந்தியை இரண்டாம் மொழியாக எடுத்துப் படித்தவர். அவருடைய இந்தி ஆசிரியை பெயர் சுகந்தி குந்தலாம்பாள்.

அதே கல்லூரியில் படித்த திருச்சியைச் சேர்ந்த மற்றொருவரும் இந்தியை இரண்டாம் மொழியாகப் படித்திருக்கிறார். அதற்கு முக்கியக் காரணம், இந்தி படித்தால் உதவித் தொகை கிடைக்கும் என்பதுதான். சீதாலட்சுமி ராமசுவாமி கல்லூரி வளாகத்திலேயே இருக்கும், சாவித்திரி வித்யாசாலை பள்ளியில் இவருடைய சகோதரி சமஸ்கிருதம் படித்திருக்கிறார். 1970-களில் சமஸ்கிருதம் படிப்பவர்களுக்கு நடக்கும் சிறப்பு வகுப்பில் சேர்ந்தால், ரூ 20 உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நிர்மலா சீத்தாராமன் நாடாளுமன்றத்தில் கூறியது பச்சைப் பொய்” எனக் குறிப்பிட்டுள்ளார். வெளியில் வதந்தி, அவையில் பொய். இவைதான் அவர்களின் உண்மை முகம்.

## :ப்ளாஷ்பேக்





துளசி அய்யா

### ‘மினிட்’ படம்!

2001-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தொகுதிவாரியாகச் செயல்வீரர் கூட்டம் கூட்டி, ஒன்றியக் கழகங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். அப்போது, ஒன்றியத் தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக இருந்த எனது ‘மினிட்’ புத்தகத்தை ஆய்வு செய்து, இன்னும் நிறைய நிகழ்ச்சிகளை நடத்திடும்படி அறிவுறுத்தினார். பள்ளிச் சிறுவன் பாடப் புத்தகத்தில் மறைத்து வைத்திருக்கும் மயிலிறகினை எடுத்துப் பார்த்துப் பார்த்து பரவசமாவது போல் இன்றும் அதை நினைத்து, உளம் நிறைந்த உவகையும் இயக்கப் பணியில் உத்வேகமும் கொள்கிறேன்.

**-டி.பி.டி ஆர்.துளசி அய்யா,**
**பேரூர் தி.மு.க. செயலாளர்,**
**அய்யம்பேட்டை,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணா கவிதாஞ்சலி!

**1969 -ஆம் ஆண்டு, பேறறிஞர் அண்ணா மறைவையொட்டி கவிதாஞ்சலி ஒன்று படிக்க வேண்டும் என சென்னை வானொலியில் இருந்து கலைஞரிடம் கேட்டுள்ளனர். அண்ணா மறைந்த ஒரு வாரத்துக்குள்ளாக மிகுந்த துயருடன், ‘பூவிதழின் மென்மையினும் மென்மையான புனித உள்ளம்’ என எழுதத் தொடங்கினார் கலைஞர். பல பக்கங்கள் நீண்ட அந்தக் கவிதையை, ‘நீ இருக்குமிடம் தேடி நான் வரும் வரையில், இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா! நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!’ என முடித்தார். பிப்ரவரி 9-ஆம் தேதி, அவரது குரலிலேயே அந்த கவிதாஞ்சலி ஒலிபரப்பானது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 208




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131